அறிக்கை அளிக்கக்கூடியது

இந்திய உச்ச நீதிமன்றம்

குற்றவியல் மேல்முறையீட்டு அதிகார வரம்பு

குற்றவியல் மேல்முறையீடு எண் 1192/2018

(சி.அ.ம (குற்றவியல்) எண் 6225/2017-இலிருந்து எழுகிறது)

பிரதீப் பிசோய் எனும் ரஞ்சித் பிசோய் ... மேல்முறையீட்டாளர் (கள்)

-எதிர்-

ஒடிசா மாநில அரசு .....எதிர்மேல்முறையீட்டாளர் (கள்)

தீர்ப்புரை

மாண்புமிகு நீதியரசர் திரு. அசோக் பூஷன்:

இம்மேல்முறையீடானது, ஒரிசா உயர் நீதிமன்றத்தின் 25.01.2017-ஆம் தேதியிடப்பட்ட (2017 கிரி. லா ஜெ. (என்.ஓ.சி.)373-இல் அறிக்கையிடப்பட்ட) தீர்ப்புரைக்கு எதிராக, குற்றஞ்சாட்டப்பட்டவரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவு 304, பகுதி II-இன் கீழான மேல்முறையீட்டாளரின் தண்டனைத் தீர்ப்பையும், விசாரணை நீதிமன்றத்தால் தீர்வளிக்கப்பட்ட ஐந்து வருடகால கடுங்காவல் சிறைத்தண்டனையையும் எதிர்த்து, மேல்முறையீட்டாளரால் தாக்கல் செய்யப்பட்ட குற்றவியல் மேல்முறையீட்டை ஒரிசா உயர் நீதிமன்றம், எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரை மூலம் தள்ளுபடி செய்தது.

2. பதிவாவணத்திலிருந்து தெரியவரும் அரசுத்தரப்பு வழக்காவது, பாஸ்கர் சாஹீ (இறந்தவர்) 28.11.1990 அன்று காலை 7.00 மணியளவில், பேலபாடா அருகில் தனது மிதிவண்டியில் சென்றுகொண்டிருந்தார். பேலபாடா பாலம் அருகே குற்றஞ்சாட்டப்பட்டவர், இறந்தவரை நோக்கி வெடிகுண்டை

வீசினார். அது, இறந்த பாஸ்கர் சாஹீவின் வலது காலில்பட்டதன் காரணமாக, அவர் சாலையில் விழுந்தார். பாஸ்கர் சாஹீ தனது உயிரைக் காத்துக்கொள்ள ஓடியபோது, குற்றஞ்சாட்டப்பட்டவர் இறந்தவருக்கு முன்பாக ஓடிவந்து பாஸ்கர் சாஹீவின் வலது தோளின்மீது இடுப்புவார்ப் பட்டையால் தாக்கியதில், அவர் கீழே விழுந்தார். அதன்பின்னர், குற்றஞ்சாட்டப்பட்டவர் பாஸ்கர் சாஹீவின் தலை, முகம் மற்றும் மார்பின் மேல் அமிலத்தை ஊற்றினார். அதன்பின்னர், குற்றஞ்சாட்டப்பட்டவரும், அவரது நண்பர்களும் அந்த இடத்தைவிட்டகன்றனர். பாஸ்கர் சாஹீவின் கிராமத்தை சேர்ந்தவரான காலியா பாட்டி, இறந்தவரை மிதிவண்டியின் உதவியுடன் கொண்டுசென்றார். பின்னர் பாஸ்கர் சாஹீவின் சகோதரரான சுரேந்திர நாத் சாஹீ தாக்கப்பட்ட செய்தியை அறிந்ததும், அக்கிராமத்தைச் சேர்ந்த தாரினி சாஹீ, காசிநாத் பிசாய் மற்றும் பித்யாதர் பாபு ஆகியோருடன் வந்து, பாஸ்கர் சாஹீயை பிர் காம்பூர் மருத்துவக் கல்லூரியில் சேர்த்தனர். பாஸ்கர் சாஹீவின் சகோதரரான சுரேந்திர நாத் சாஹீ குற்றஞ்சாட்டப்பட்டவரின் பெயரைக் குறிப்பிட்டு, முதல் தகவல் அறிக்கையைத் தாக்கல் செய்தார். முதல் தகவல் அறிக்கையானது, இ.த.ச., பிரிவுகள் 324/326/286/34-இன் கீழ் தாக்கல் செய்யப்பட்டது. விசாரணை அதிகாரி, 30.11.1990 அன்று சம்பவம் நடந்த இடத்தைப் பார்வையிட்டு, இரத்தக்கறை படிந்த கல் ஒன்றையும், மாதிரி கல்லையும், அமில வாசனையுடன் கூடிய ஒரு மஞ்சள் நிற பனியனையும் கைப்பற்றி, கைப்பற்றுகை பட்டியலைத் தயார் செய்தார். சிறிது மண் மாதிரியையும், அமில வாசனையுடன் கூடிய ஒரு துவாலையையும் கண்டறிந்தார். அதன்பின்னர், விசாரணை அதிகாரி சாட்சிகளை விசாரணை செய்தார். விசாரணை அதிகாரி, 05.12.1990 அன்று குற்றஞ்சாட்டப்பட்டவர் கைது செய்யப்பட்டதை தெரிவித்தார். 05.12.1990 அன்று விசாரணை அதிகாரி, கு.வி.மு.ச., பிரிவு 161-இன் கீழ் பாஸ்கர் சாஹீவின் வாக்குமூலத்தைப் பதிவு செய்தார். அந்த வாக்குமூலத்தில் பாஸ்கர் சாஹீ வெடிகுண்டுவீசி, இடுப்புவார்ப் பட்டையால் தாக்கி, தனது முகம் மற்றும் தலையில் அமிலத்தை வீசிய நபர்களையும், குற்றஞ்சாட்டப்பட்டவரையும்

பெயர்க் குறிப்பிட்டிருந்தார். குற்றஞ்சாட்டப்பட்டவர் வழக்கை எதிர்த்தார் மற்றும் அ.சா .1-தகவல் அளித்தவர், அ.சா.2-தண்டபாணிதாஸ் மற்றும் அ.சா.3-பிரபுல்ல லியுமென் சாஹீ ஆகியோர் அரசுத்தரப்பால் விசாரிக்கப்பட்டனர். விசாரணை அதிகாரி (அ.சா .4) பிரிதாந்தி மோகியும் சாட்சிக் கூண்டில் ஏறினார். இறந்துபோனவர் 25.03.1991-ஆம் தேதியன்று மருத்துவமனையிலுள்ளபோதே இறந்துவிட்டார். எதிர்த்தரப்பானது இரண்டு சாட்சிகளான பி.சா .1-ரமேஷ் சந்திர சாஹீ மற்றும் பி.சா .2-பித்யாதர் சாஹீவை விசாரணை செய்தது.

3. விசாரணை நீதிமன்றமானது, பதிவாவணத்தில் உள்ள சான்றினை ஆய்வு செய்தும், தரப்பினர்களுக்கான வழக்குரைஞரின் வாதத்தைக் கேட்டும், இ.த.ச., பிரிவு 304, பகுதி II-இன் கீழ் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு தண்டனைத் தீர்ப்பு வழங்கி, ஐந்து வருடகால கடுங்காவல் சிறைத் தண்டனையாகத் தீர்வளித்தது. விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்புரையால் மனக்குறையுற்று, குற்றஞ்சாட்டப்பட்டவரால் உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டது. அது, எதிர்ப்பிற்குள்ளான தீர்ப்பூரை மூலம் உயர் நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

4. மேல்முறையீட்டாளருக்கான கற்றறிந்த வழக்குரைஞர் வாதிடுவதாவது, அ.சா .1-இன் சான்று, மற்ற சாட்சிகளின் சான்றுடன் முரண்பட்டுள்ளது. எவர், காயமடைந்தவரை மருத்துவமனைக்கு கொண்டுசென்றார் என்பது குறித்து முரண்பாடுள்ளது. பாதிப்படைந்தவர் சுயநினைவிழந்த நிலையில், குற்றஞ்சாட்டப்பட்டவர்தான் தன்னைத் தாக்கியதாக அ.சா .1-இடம் கூறினார் என்பது நம்பத்தக்கதாகயில்லை. லஷ்மண் -எதிர்-மகாராஷ்டிர மாநில அரசு, (2002) 6 எஸ்.சி.சி. 710:(ஏ.ஐ.ஆர்.2002 எஸ்.சி .2973) -இல் இந்நீதிமன்றத்தின் அரசியலமைப்பு ஆயத்தால் வகுக்கப்பட்ட நன்கு அறுதியிடப்பட்ட சட்டக்கோட்பாட்டைக் கருத்திற்கொண்டு, கு.வி.மு.ச.-இன் பிரிவு 161-இன் கீழ் பதிவு செய்யப்பட்ட காயமடைந்தவரின் வாக்குமூலமானது, மரண

வாக்குமூலமாக கருதப்படமுடியாது, இரு கீழமை நீதிமன்றங்களும், குற்றத்தின் காரணகர்த்தா யார் என்பதைக்குறித்து பதிவாவணத்திலுள்ள சான்றின் பேரிலல்லாமல், கற்பனையின் பேரிலும், ஊகத்தின் அடிப்படையிலுமான காண்முடிவுக்கு வந்துள்ளன.

5. மேல்முறையீட்டாளருக்கான வழக்குரைஞரின் பணிந்துரையை மறுத்து, அரசுக்கான கற்றறிந்த வழக்குரைஞர் வாதிடுவதாவது, ஆவணச்சான்றின் அடிப்படையில், இரு நீதிமன்றங்களும், குற்றஞ்சாட்டப் பட்டவருக்கெதிரான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டுவிட்டதென சரியாகத் தீர்மானித்துள்ளன என்று வாதுரைத்தார். 05.12.1990 அன்று காயமடைந்தவரால் அளிக்கப்பட்டு, விசாரணை அதிகாரியால் பதிவு செய்யப்பட்ட வாக்குமூலத்தைச் சார்வுற்றதில், கீழமை நீதிமன்றம் எந்தப் பிழையும் புரியவில்லை. மேலும், வெடிகுண்டை எறிந்ததும், இடுப்புவார்ப்பட்டையால் தாக்கியதும், அமிலத்தை வீசியதும் குற்றஞ்சாட்டப்பட்டவரே என்று மரணமுற்றவர் எவரிடம் தெரிவித்திருந்தாரோ, அந்த அ.சா .1-இன் சாட்சியம் கீழமை நீதிமன்றங்களால் தக்கவகையில் நம்பப்பட்டுள்ளது. காயமடைந்தவரால் 05.12.1990 அன்று அளிக்கப்பட்ட வாக்குமூலமானது முழுமையாக ஏற்கத்தக்கது என்றும், கீழமை நீதிமன்றம் அதில் சார்வுற்றதில் எப்பிழையும் புரியவில்லை என்றும் பணிந்துரைக்கப்படுகிறது. அரசுக்கான கற்றறிந்த வழக்குரைஞர் **முகேஷ்பாய் கோபால்பாய் பரோட் -எதிர்-குஜராத் மாநில அரசு, (2010) 8 ஸ்கேல் 477:(ஏ.ஐ.ஆர்.2010 எஸ்.சி. 3692) மற்றும் ஸ்ரீ பகவான் எதிர்-உத்தரப் பிரதேச மாநில அரசு, (2013) 12 எஸ்.சி.சி. 137:(2012 ஏ.ஐ.ஆர். எஸ்.சி.டபிள்யூ.6570)** - இல் இந்நீதிமன்றத்தின் தீர்ப்புரையின்மீது சார்ந்து நின்றார்.

6. நாங்கள், தரப்பினர்களுக்கான கற்றறிந்த வழக்குரைஞரின் பணிந்துரைகளைப் பரிசீலித்து, பதிவாவணங்களையும் பார்வையிட்டோம்.

7. மேல்முறையீட்டாளருக்கான கற்றறிந்த வழக்குரைஞரின் பணிந்துரையின் முக்கிய வற்புறுத்தல் யாதெனில், பாதிக்கப்பட்டவருக்கு மூன்று மாதங்கள்

கழித்தே மரணம் ஏற்பட்டதால், 05.12.1990 அன்று விசாரணை, அதிகாரியால் பதிவு செய்யப்பட்ட பாதிக்கப்பட்டவரின் வாக்குமூலமானது மரண வாக்குமூலமாக கருதப்படமுடியாது என்பதாகும். மேற்சொன்ன வாக்குமூலத்தை மரண வாக்குமூலமாக கருதியதில் இரு நீதிமன்றங்களும் பிழை புரிந்துள்ளன என்று அவர் பணிந்துரைக்கிறார்.

8. இறக்கப்போகும் அல்லது கண்டுபிடிக்கப்பட முடியாதபடியாகும், மேலும் இன்னபிற நபர்களால் தொடர்புடைய பொருண்மை பற்றி சொல்லப்படும் உரை எந்தச் சந்தர்ப்பங்களில் தொடர்புடையதாகும் என சாட்சியச் சட்டத்தின் பிரிவு 32 குறிப்பிடுகிறது. **பிரிவு 32 தற்போதைய வழக்கில் தொடர்புற்றிருப்பதைப் பொறுத்தவரையில், அது பின்வருமாறு:**

> **பிரிவு32. இறக்கப்போகும் அல்லது கண்டுபிடிக்கப்பட முடியாதபடியாகும், மேலும் இன்னபிற நபர்களால் தொடர்புடைய பொருண்மை பற்றி சொல்லப்படும் வாக்குமூலம் எந்தச் சந்தர்ப்பங்களில் தொடர்புடையதாகும்-இறக்கப்போகும் அல்லது கண்டுபிடிக்கப்பட முடியாதபடியாகும் அல்லது சாட்சியம் கொடுக்கத் திறனற்றவராகும் ஒருவரால் அல்லது வழக்கின் சூழ்நிலைகளில் நியாயமற்றவை என்று நீதிமன்றத்திற்குத் தோன்றும் அளவிற்குத் தாமதமோ, செலவோ இல்லாமல் எவரது வருகையை முயன்றும் பெறமுடியாதபடியாகும் அவரால், தொடர்புடைய பொருண்மைகளைப் பற்றி எழுத்துமூலமாக அல்லது வாய்மொழியாக சொல்லப்பட்ட உரைகளானவையே பின்வரும் நேர்வுகளில் தொடர்புடைய பொருண்மைகளாகும்:**
>
> அது மரணத்திற்கான காரணத்திற்கு தொடர்புடையதாயிருக்கும்போது ஒருவருடைய மரணத்திற்கான காரணம், பிரச்சனையில் இருக்கும் நேர்வுகளில் அவருடைய மரணத்திற்கான காரணத்தைப் பற்றியோ அல்லது அவருடைய மரணத்தை விளைவித்த நடவடிக்கையின் சூழ்நிலைகளில் எதையேனும் பற்றியோ, அவரால் வாக்குமூலம் அளிக்கப்படும்போது.

அத்தகைய வாக்குமூலத்தை அளிக்கும்போது, அவற்றை கொடுத்தவர், மரணத்தை எதிர்பார்த்து இருந்தாலும் அல்லது எதிர்பார்க்காதிருந்தாலும், அவரது மரணத்திற்கான காரணம் எந்த நடவடிக்கையில் பிரச்சனைக்கு வந்திருக்கிறதோ, அந்த நடவடிக்கையின் தன்மை எத்தகையதாயிருந்தாலும், அவை தொடர்புடையவையாகும்.

xxxxxxxxxxxxxx

எடுத்துக்காட்டுகள்:

(அ) ' அ ' என்பவர் ' ஆ ' என்பவரால் கொலை செய்யப்பட்டாரா? என்பது கேள்வி அல்லது

அல்லது ' அ ' என்பவர் வன்புணர்ச்சி செய்யப்பட்ட ஒரு நடவடிக்கையில் அடைந்த காயங்களால் அவர் இறந்தார்.அவர் ' ஆ '-வினால் வன்புணர்ச்சி செய்யப்பட்டாரா?என்பது கேள்வி அல்லது

' ஆ"வின் மீது ' அ '- ஐ இழந்த கணவனால், உரிமை வழக்கு ஒன்று தொடரப்படலாம் என்றும் சூழ்நிலைகளில் ' அ ' என்பவர் ' ஆ"வினால் கொல்லப்பட்டாரா?என்பது கேள்வி.

கொலை, வன்புணர்ச்சி ஆகியவை முறையே சுட்டிக்காட்டப்பட்டு, அவனது அல்லது அவளது மரணத்தின் காரணம்பற்றி ' அ ' என்பவரால் அளிக்கப்பட்ட வாக்கு மூலங்களும், பரிசீலனைக்குரிய நடவடிக்கையெடுக்கத்தக்க தவறும் தொடர்புற்ற பொருண்மைகளாகும்.

9. கவனிக்கப்படவேண்டிய தொடர்புடைய மற்ற வகைமுறைகள், குற்றவியல் விசாரணைமுறைச் சட்டத்தின் பிரிவு 161 மற்றும் பிரிவு 162 ஆகும்.பிரிவு 161-ஆனது காவல்துறையால் செய்யப்படும் சாட்சிகளின் விசாரணை

பற்றியதாகும்.பிரிவு 162-ஆனது " காவல்துறையினரிடம் கொடுக்கப்படும் வாக்குமூலங்கள், கையொப்பமிடுதல் ஆகாது-சாட்சியத்தில் வாக்குமூலங்களைப் பயன்படுத்துதல் ", கு.வி.மு.ச., பிரிவு 162-ஆனது பின்வருமாறு:

> **162. காவல்துறையினரிடம் கொடுக்கப்படும் வாக்குமூலங்களுக்கு கையொப்பமிடுதல் ஆகாது; சாட்சியத்தில் வாக்குமூலங்களைப் பயன்படுத்துதல்** (1) **இந்த அத்தியாயத்தின்படி நடக்கும் புலனாய்வின்போது, காவல் அலுவலரிடம் ஏதொரு நபரால் கொடுக்கப்படும் வாக்குமூலம் எதுவும், அது, எழுத்தில் வடிக்கப்படுமானால், வாக்குமூலத்தைக் கொடுக்கின்றவர் அதில் கையொப்பமிடுதல் ஆகாது, அத்தகைய வாக்குமூலமோ, அதன் பதிவுக்குறிப்போ, அது காவல் குறிப்பேட்டிலிருந்தாலும் சரி, வேறு விதமாகயிருந்தாலும் சரி அல்லது அத்தகைய வாக்குமூலம் அல்லது அதன் பதிவுக்குறிப்பின் பகுதியோ, அந்த வாக்குமூலம் கொடுக்கப்பட்ட காலத்தில் புலனாய்விலிருந்த குற்றம் எதனையும் பற்றிய பரிசீலனையில் அல்லது விசாரணையில் இதற்குப்பின் வகை செய்யப்பட்ட நேர்வுகளில் தவிர, எந்தக் காரணத்திற்காகவும் பயன்படுத்தப்படுதல் ஆகாது.**
>
> இருப்பினும், எந்தச் சாட்சியின் வாக்குமூலம் மேற்சொன்னவாறு எழுத்தில் வடிக்கப்பட்டுள்ளதோ, அந்தச் சாட்சி அத்தகைய வழக்கின் பரிசீலனை அல்லது விசாரணைக்கு அழைக்கப்படும்போது, அவரது வாக்குமூலத்தின் எந்தப் பகுதியேனும் முறைப்படி மெய்ப்பிக்கப்படுமானால், எதிரியாலும் நீதிமன்றத்தின் அனுமதியுடன் அரசுத்தரப்பாலும், 1872 (1/1872) -ஆம் ஆண்டு இந்திய சாட்சியச் சட்டத்தின் 145-ஆவது பிரிவில் வகை செய்யப்பட்டமுறையில்

அத்தகைய சாட்சியின் வாக்குமூலத்தை மறுப்பதற்காக அதைப் பயன்படுத்தலாம் மற்றும் அத்தகைய வாக்குமூலத்தின் எந்தப் பகுதியேனும் அவ்வாறு பயன்படுத்தப்படும்போது, அதன்பகுதி எதையும், அத்தகைய சாட்சியின் மறுவிசாரணையிலுங்கூட பயன்படுத்தலாம், ஆனால், அவரது குறுக்கு விசாரணையில் குறிப்பிடப்பட்ட விடயம் எதனையும் விளக்குகின்ற நோக்கத்திற்காக மட்டுமே அவ்வாறு பயன்படுத்தலாம்.

(2) இந்தப் பிரிவிலுள்ள எதுவும், 1872 (1/1872) -ஆம் ஆண்டு இந்திய சாட்சியச் சட்டத்தின் 32-ஆவது பிரிவின் (1) -ஆவது கூறின் வகைமுறை களுக்குள் வருகின்ற வாக்குமூலமெதனின் மீதும் இயங்குவதாகவோ, அந்தச் சட்டத்தின் 27-ஆவது பிரிவின் வகைமுறைகளைப் பாதிப்பதாகவோ கொள்ளுதலாகாது.விளக்கம்- (1) -ஆவது உட்பிரிவில் குறிப்பிடப் பட்ட வாக்குமூலத்தில் ஒரு நிகழ்மை அல்லது சூழ்நிலை சொல்லாமல் விடப்பட்டிருந்தால், எந்த சந்தர்ப்பத்தில் அவ்வாறு விடப்பட்டது து என்பதைக் கவனத்திற்கொண்டு பார்க்கும்போது, அது முக்கியத்துவம் வாய்ந்ததாகவும், மற்றபடி தொடர்புடையதாகவும் தோன்றுமானால், அது முரண்பாட்டுக்குரியதாகலாம் மற்றும் அவ்வாறு விட்ட செயல் எதுவும், குறிப்பிட்ட நேர்வில் முரண்பாடுடையதா? என்பது ஒரு நிகழ்மை பற்றிய பிரச்சனையாகும்.

10. உட்பிரிவு (1) -இல் எது வகுத்துரைக்கப்பட்டுள்ளதோ, அதற்கு ஒரு தெளிவான விதிவிலக்கை பிரிவு 162-இன் உட்பிரிவு (2) கொண்டிருக்கிறது. பிரிவு 161-இன் கீழ் காவல்துறையினரால் பதிவு செய்யப்பட்ட வாக்குமூலமானது, இந்திய சாட்சியச் சட்டத்தின் பிரிவு 32-இன் கூறு (1) -இன் வகைமுறைகளுக்குட்பட்டுள்ளதால், அது, தெளிவாகவே தொடர்புடையதும் ஏற்கத்தக்கதுமாகும். (மேற்கண்ட) முகேஷ்பாய் கோபால்பாய் பரோட் (ஏ.ஐ.ஆர்.2010 எஸ்.சி. 3692) -இல் இந்நீதிமன்றம் கு.வி.மு.ச.-இன் பிரிவுகள் 161 மற்றும் 162-ஐயும், சாட்சியச் சட்டத்தின் பிரிவு 32-ஐயும் பரிசீலிக்கும்

வாய்ப்பைப் பெற்றிருந்தது. மேற்படி வழக்கில், 14.09.1993 அன்று தீக்காயங்களடைந்த பாதிக்கப்பட்டவர் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டாள். அவளது வாக்குமூலமானது செயலாட்சித்துறை நடுவராலும், காவல்துறையினராலும் பதிவு செய்யப்பட்டது. கு.வி.மு.ச., பிரிவு 161-இன் கீழ் காவல்துறையால் பதிவு செய்யப்பட்ட வாக்குமூலத்திற்கு சாட்சிய மதிப்பு ஏதுமில்லை என்ற கருத்துடன் உயர் நீதிமன்றத்தால் அது நிராகரிக்கப் பட்டது. உயர் நீதிமன்றத்தின் கருத்து, இந்நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. பத்திகள் 4 மற்றும் 5-இல் இந்நீதிமன்றமானது, பிரிவு 161-இன் கீழ் பதிவு செய்யப்படும் வாக்குமூலமானது, அந்நபர்களின் மரணத்திற்கு பின்னர், மரண வாக்குமூலமாக கருதப்படலாம் என்று தீர்மானித்தது. 4 மற்றும் 5-ஆவது பத்திகளில் பின்வருமாறு வகுத்துரைக்கப் பட்டுள்ளதாவது:

> **"4.** நாங்கள், தரப்பினர்களுக்கான கற்றறிந்த வழக்குரைஞரால் முன்வைக்கப்பட்ட வாதுரைகளைப் பரிசீலித்திருக்கிறோம். கு.வி.மு.ச.,-இன் பிரிவு 161 மற்றும் 162-இன் வகைமுறைகளின்படியாக மரண வாக்குமூலங்களான சா.ஆ .44 மற்றும் 48- ஐ ஒன்றிணைத்து வாசிக்கும்போது, அவற்றைச் சான்றாக எடுத்துக் கொள்ளப்படமுடியாது என்ற உயர்நீதிமன்றத்தின் கருத்துரைகளைக் குறித்து நாங்கள் ஆரம்பத்திலேயே விவாதிக்கவேண்டும்.ஆயினும், இந்தக் காண்முடிவுகள் பிழையானவையாகும். 1872-ஆம் ஆண்டு இந்திய சாட்சியச் சட்டத்தின் பிரிவு 32-இன் உட்பிரிவு (1)-ஆனது இறக்கப்போகும் நபரால் அளிக்கப்பட்ட வாக்குமூலத்தின் தொடர்புடைமை உட்பட பல்வேறு சூழ்நிலைகளைக் குறித்து விவாதிக்கிறது. வகைமுறை பின்வருமாறு எடுத்துரைப்பதாவது:
>
> பிரிவு32. இறக்கப்போகும் அல்லது கண்டுபிடிக்கப்பட முடியாதபடியாகும், மேலும் இன்னபிற நபர்களால் தொடர்புடைய பொருண்மைகள் பற்றிச் சொல்லப்படும் வாக்குமூலம் எந்தச்

சந்தர்ப்பங்களில் தொடர்புடையதாகும் இறக்கப்போகும் அல்லது கண்டுபிடிக்கப்பட முடியாதபடியாகும் அல்லது சாட்சியம் கொடுக்கத் திறனற்றவர் ஆகிவிடும் நபர்களால் அல்லது வழக்கின் சூழ்நிலைகளில் நியாயமற்றவை என்று நீதிமன்றத்திற்குத் தோன்றும் அளவிற்குத் தாமதமோ, செலவோ இல்லாமல், எவரது வருகையை முயன்றும் பெற முடியாதபடியாகும் அவரால், தொடர்புடைய பொருண்மைகளைப் பற்றிச் சொல்லப்பட்ட எழுத்துமூலமான அல்லது வாய்மொழியான உரைகளானவையே பின்வரும் நேர்வுகளில் தொடர்புடைய பொருண்மைகளாகும்

(1) அது மரணத்திற்கான காரணத்தைப் பற்றியதாயிருக்கும்போது-ஒருவருடைய மரணத்திற்கான காரணம் பிரச்சனையிலிருக்கும் நேர்வுகளில், அவருடைய மரணத்திற்கான காரணத்தைப் பற்றியோ அல்லது அவருடைய மரணத்தை விளைவித்த நடவடிக்கையின் சூழ்நிலைகளில் எதையேனும் பற்றியோ, அவரால் வாக்குமூலம் அளிக்கப்படுகிறபோது. அத்தகைய வாக்குமூலம் அளிக்கும்போது அவற்றைக் கொடுத்தவர் மரணத்தை எதிர்பார்த்து இருந்தாலும் அல்லது எதிர்பார்க்காதிருந்தாலும் மற்றும் அவரது மரணத்திற்கான காரணம் எந்த நடவடிக்கையில் பிரச்சனைக்கு வந்திருக்கிறதோ, அந்த நடவடிக்கையின் தன்மை எத்தகையதா யிருந்தாலும் அவை தொடர்புடையவையாகும்.

மேற்படி வகைமுறையின்படி, மேற்சொன்ன மரண வாக்குமூலங்களைத் தொடர்புடையனவாக நாங்கள் கருதுகிறோம். மற்றவகையிலுங்கூட, கு.வி.மு.ச.-இன் பிரிவு 161 மற்றும் 162-ஆனவை, விசாரணை மேற்கொண்டிருக்கும்போது பதிவு செய்யப்பட்ட வாக்குமூலங்களை வரையறுக்கப்பட்ட விதத்தில் பயன்படுத்துவதற்கு ஏற்புடையவகையில் வகைசெய்கிறது. ஆனால், பிரிவு 162-இன்

உட்பிரிவின் (2) -ஆனது வாக்குமூலம் அளித்தவர் இறந்துவிடும் சூழ்நிலையைக் குறித்து விவாதிக்கிறது.அது பின்வருமாறு எடுத்துரைப்பதாவது:

" (2) இந்தப் பிரிவிலுள்ள எதுவும், 1872-ஆம் ஆண்டு இந்திய சாட்சியச் சட்டத்தின் 32-ஆவது பிரிவின் (1) -ஆவது கூறின் வகைமுறைகளுக்குள் வருகின்ற வாக்குமூலமெதனின் மீதும் இயங்குவதாகவோ, அந்த சட்டத்தின் 27-ஆவது பிரிவின் வகைமுறைகளைப் பாதிப்பதாகவோ கொள்ளுதலாகாது. "

5. மேற்படி வகைமுறையினை சாதாரணமாகப் பார்வையிட்டு, இந்திய சாட்சியச் சட்டத்தின் பிரிவு 32 உடன்சேர்த்து படிக்கிறபோது, பிரிவு 161-இன் கீழ் பதிவு செய்யப்படும் ஒரு நபரின் வாக்குமூலம், அவரது மரணத்திற்கு பின்னர், மரண வாக்குமூலமாக கருதப்படும் என்பதை வெளிப்படுத்துகிறது. மரண வாக்குமூலங்களான சா.ஆ .44 மற்றும் 48-க்கு சான்றுமதிப்பு ஏதுமில்லாததால், அவை பிழையானவை என்பதே உயர் நீதிமன்றத்தின் கருத்துரையாகும். இவ்விடயத்தைக் கருத்திற்கொண்டு, 1993-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 14-ஆம் நாளன்று நடுவர் ஒருவரிடம் கொடுக்கப்பட்ட முதல் மரண வாக்குமூலமானது உள்ளபடியாக இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கையாக இருக்கும். "

11.இந்நீதிமன்றத்தால் **(மேற்கண்ட) ஸ்ரீ பக்வான்** (2012 ஏ.ஐ.ஆர். எஸ்.சி.டபிள்யூ.6570) என்ற வழக்கில் இதேபோன்றதொரு கருத்து வெளிப்படுத்தப்பட்டுள்ளது.அதில் இந்நீதிமன்றம், கு.வி.மு.ச., பிரிவு 161 மற்றும் இந்திய சாட்சியச் சட்டத்தின் பிரிவு 32 குறித்து பரிசீலிக்க நேரிட்டது.இந்நீதிமன்றம் பாதிக்கப்பட்டவரின் இறப்புக்கு பின்னர், கு.வி.மு.ச., பிரிவு 161-இன் கீழான வாக்குமூலத்தைக் குறித்து விவாதித்தது.20 முதல் 24

வரையிலான பத்திகளில்:(ஏ.ஐ.ஆர்.எஸ்.சி.டபிள்யூ.-இல் பத்திகள் 17 முதல் 21 வரை) பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டுள்ளதாவது:

> "20. மேற்படி விதியமைப்பை மனதில் வைத்துக்கொண்டு, கையிலுள்ள வழக்கில் மேல்முறை யீட்டாளருக்கான கற்றறிந்த வழக்குரைஞரின் பணிந்துரையை நாங்கள் ஆராய்ந்ததில், கு. வி.மு.ச., பிரிவு 161-இன் கீழ் இறந்துபோனவரின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்ட சமயத்தில் பாதிக்கப்பட்டவர் அடைந்த கொடுங்காயங்களைக் கருத்திற்கொண்டு, குற்றமானது இ.த.ச., பிரிவு 326-இன் கீழ் பதிவு செய்யப்பட்டது. பாதிக்கப்பட்டவர் கடுமையான காயங்களடைந்திருந்ததால், உடனடியாக மருத்துவ உதவி தேவைப்பட்டதால் அ.சா .4, பாதிப்படைந்தவரின் மரண வாக்குமூலத்தைப் பதிவு செய்வதைக்குறித்து சிந்திக்கவில்லை. அவரை முறையான சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அனுப்புவதற்கு முன்பாக, சம்பவம் நடந்ததைக் குறித்த கூற்றை பாதிப்படைந்தவரிடமிருந்தே பெற்று, பதிவு செய்வது உகந்ததாயிருக்கும் என அ.சா .4 கருதினார். இவ்வாறாகத்தான் சான்றாவணம் கா .2 பதிவு செய்யப்பட்டது. வாக்குமூலமானது, கு.வி.மு.ச., பிரிவு 161-இன் கீழான ஒன்றாக சந்தேகத்திற்கிடமின்றி பதிவு செய்யப்பட்டது. மறுநாளன்று பாதிக்கப்பட்டவரின் மரணத்தில் முடிவுற்ற மாறுதலான சூழ்நிலை பின்னர் ஏற்பட்டது மற்றும் மேற்படி வாக்குமூலத்தை மரண வாக்குமூலமாக கருதி, அதில் அரசுத்தரப்பு சார்வுறுவதற்கு சட்டம் அதிகாரமளிக்கிறது. எதிர்மேல்முறையீட்டாளரின் வழக்குரைஞரின் சார்பாக முன்வைக்கப்பட்ட பணிந்துரைகள் ஏற்குந்தகுதி யுடையனவா? என்பதே பரிசீலனைக்குரிய வினாவாகும்.
>
> 21. கற்றறிந்த மூத்த வழக்குரைஞரான திரு. ரத்னாகர் தாஸ், கு.வி.மு.ச., பிரிவு 162 (2) -ஐ குறிப்பாகச் சுட்டிக்காட்டி, மேற்படி பிரிவானது, சில விதிவிலக்கான சூழ்நிலைகளில், கு.வி.மு.ச., பிரிவு 161-இன் கீழான

வாக்குமூலத்தை சாட்சியச் சட்டத்தின் பிரிவு 32 (1) -இன்படியானதொரு அறிக்கையாக அனுமதித்து, ஒரு விதிவிலக்கையும், நம்பிக்கையும் அளிக்கிறது.கு.வி.மு.ச., பிரிவு 162 (2) -ஆனது பின்வருமாறு எடுத்தியம்பப்படுவதாவது:

> **" 162 (2).** இந்த பிரிவிலுள்ள எதுவும் 1872-ஆம் ஆண்டு இந்திய சாட்சியச் சட்டத்தின் 32-ஆவது பிரிவின் (1) -ஆவது கூறின் வகைமுறைகளுக்குள் வருகின்ற வாக்குமூலமெதனின்மீதும் இயங்குவதாகவோ, அந்த சட்டத்தின் 27-ஆவது பிரிவின் வகைமுறைகளைப் பாதிப்பதாகவோ கொள்ளுதலாகாது. "

22. சாட்சியச் சட்டத்தின் பிரிவு 32 (1) -**இன் கீழ் பின்வருமாறு வகை செய்யப்பட்டுள்ளதாவது**:

> **"32. இறக்கப்போகும் அல்லது கண்டுபிடிக்க முடியாதபடியாகும் மேலும் இன்னபிற நபர்களால் தொடர்புடைய பொருண்மைகள் பற்றிச் சொல்லப்படும் வாக்குமூலமானது எந்தச் சந்தர்ப்பங்களில் தொடர்புடைய தாகும் -இறக்கப்போகும் அல்லது கண்டுபிடிக்கப்பட முடியாதபடியாகும் அல்லது சாட்சியம் கொடுக்கத் திறனற்றவர் ஆகிவிடும் நபர்களால் அல்லது வழக்கின் சூழ்நிலைகளில் நியாயமற்றவை என்று நீதிமன்றத்திற்குத் தோன்றும் அளவிற்குத் தாமதமோ, செலவோ இல்லாமல் எவரது வருகையை முயன்றும் பெறமுடியாதபடியாகும், அவரால் தொடர்புடைய பொருண்மைகளைப் பற்றிச் சொல்லப்பட்ட எழுத்து மூலமான அல்லது வாய்மொழியான உரைகளானவையே பின்வரும் நேர்வுகளில் தொடர்புடைய பொருண்மைகள் ஆகும்:(1) அது மரணத்திற்கான காரணத்தைப் பற்றியதாகயிருக்கும்போது ஒருவருடைய மரணத்திற்கான காரணம் பிரச்சனையில் இருக்கும்**

நேர்வுகளில், அந்த உரையானது, அவருடைய மரணத்திற்கான காரணத்தைப் பற்றியோ அல்லது அவருடைய மரணத்தை விளைவித்த நடவடிக்கையின் சூழ்நிலைகளில் எதையேனும் பற்றியோ அவரால் வாக்குமூலம் அளிக்கப்படுகிறபோது.அத்தகைய வாக்குமூலம் அளிக்கும்போது அவற்றை கூறியவர், மரணத்தை எதிர்பார்த்் திருந்தாலும் அல்லது எதிர்பார்க்காதிருந்தாலும் மற்றும் அவரது மரணத்திற்கான காரணம் எந்த நடவடிக்கையில் பிரச்சனைக்கு வந்திருக்கிறதோ அந்த நடவடிக்கையின் தன்மை எத்தகையதா யிருந்தாலும் அவை தொடர்புடையவையாகும். "

23. சாட்சியச் சட்டத்தின் பிரிவு 32 (1) -இன் கருத்துப்படி, மரணத்தை எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் ஒரு நபர் அளிக்கும் வாக்குமூலம் அதை அவர் கொடுக்கும் சமயத்தில் இருந்தாலும், இல்லையென்றாலுங்கூட அந்த வாக்குமூலம் தொடர்புடையதே என்பது தெள்ளத் தெளிவாகிறது. சாட்சியச் சட்டத்தின் பிரிவு 32 (1) -இன் கீழ்வரும் அத்தகைய வாக்குமூலத்திற்கு அளிக்கும் அசாதாரணமான நம்பிக்கையைப் பொறுத்தவரை, மரண வாக்குமூலமாக பதிவு செய்யப்பட்ட அத்தகைய சாட்சியத்தின்மேல் சார்வுறுகையில், இந்நீதிமன்றமானது, உச்சளவான கவனத்தோடும், எச்சரிக்கையுடனும் இருக்கவேண்டுமென பலமுறை எச்சரித்துள்ளது.

24. கு.வி.மு.ச., பிரிவு 162 (2) -ஐ தொடர்பு படுத்துவதைப் பொறுத்தவரை, கு.வி.மு.ச., பிரிவு 161-இன் கீழான வாக்குமூலத்தின்மேல் சில விதிவிலக்கான சூழ்நிலைகளைத் தவிர, ஒரு சட்ட அறுதியுரையாகச் சார்வுறப்படலாம், எதிர்மேல்முறையீட்டாளருக்கான கற்றறிந்த மூத்த வழக்குரைஞரால் சரியாக வாதுரைத்தபடி, மேற்படி வாக்கு மூலமானது கு.வி.மு. ச., பிரிவு

161-இன் கீழ் பதிவு செய்யப்பட்டபோதிலும், மரண வாக்குமூலம் என்ற தன்மையை அடைந்து, சாட்சியச் சட்டத்தின் பிரிவு 32 (1) -க்குட்பட்டு, அதன் கீழ் மரண வாக்குமூலம் என்ற தன்மையை அடைந்துவிட்டால், பிரிவு 32 (1) -இன்படி கட்டுப்படுத்தப்படும் வாக்குமூலத்திற்கு நம்பிக்கைக்கு உரியவகையில் பொருந்தக்கூடிய எதுவாயினும், அந்த வாக்குமூலம் கு.வி.மு.ச., பிரிவு 161-இன் கீழ் பதிவு செய்யப்பட்டதாயிருந்தாலும், அது தானாகவே முழுவீச்சில் பொருந்தக்கூடியதாகக் கருதப்படவேண்டும்.பாதிப்படைந்த ஒருவர் அளிக்கும் வாக்குமூலத்தினைத் தொடர்ந்து, அவர் மரணமடைய நேர்ந்தால், அந்த வாக்குமூலத்தின்மீது சார்ந்து நிற்பதற்கு, வழக்கிடும் உரிமையுடையவரை இயல்விப்பதைக் கருத்திற்கொண்டும், சாட்சியச் சட்டத்தின் பிரிவு 32 (1) -இல் வருகின்றதும், மரண வாக்குமூலமாக கருதப்படுகின்ற ஒன்றுமான மேற்படி வாக்குமூலத்தின் தன்மையையும், அதன் உள்ளடக்கத்தையும் கருத்தில் கொண்டும், பாதிப்படைந்த ஒருவர், பிரிவு 161-இன் கீழ் பதிவு செய்யப்பட்டதாகக் கருதப்படும் வாக்குமூலம் என்ற நிலையை மேற்படி சட்டவுரை எய்தும்; அதன்மூலம், அவ்வாறாக பதிவு செய்யப்பட்டதும், கோரப்பட்டதுமான மரண வாக்குமூலத்திற்கு நம்பிக்கைக்குரியயாவும் பொருந்தத்தக்கதாகும் என பரிந்துரைக்கிறது. "

12. **நிஜாம் பராகி (எ) நிஜாம் பருக் -எதிர்-மேற்கு வங்க மாநில அரசு, (1998) 2 எஸ்.சி.சி. 45:(ஏ.ஐ.ஆர்.1998 எஸ்.சி. 682)** என்ற இந்நீதிமன்றத்தின் தீர்ப்புரையைக் குறிப்பிடுவது உகந்ததாகும். மேற்படி வழக்கில் பாதிக்கப்பட்டவர்மேல் 13.06.1985 அன்று மண்ணெண்ணெய் ஊற்றப்பட்டு, அவர் மீது தீ வைக்கப்பட்டது. அவர் கிட்டத்தட்ட ஒரு மாதம் உயிருடனிருந்து, 31.07.1985 அன்று இறந்துவிட்டார். இந்நீதிமன்றம் பிரிவு 32 (1) -ஐ குறிப்பிட்டு, பாதிக்கப்பட்டவர் மரண வாக்குமூலம் அளித்து நீண்ட நாட்களுக்குப் பிறகே இறந்தார் என்ற பொருண்மையே, அவ்வாக்குமூலத்தின்

மதிப்பை இழக்கச்செய்வதாகாது என்று தீர்மானிக்கப்பட்டது.பத்தி 9-இல் பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டுள்ளதாவது:

> **"9.** மேல்முறையீட்டாளரின் மனைவி மரண வாக்குமூலங்கள் அளித்து நீண்ட நாள் கழிந்த பின்னர் இறந்ததால், அவ்வாக்கு மூலங்களுக்கு மதிப்பேதுமில்லை என்ற வாதுரையில் தகுதிப்பாடு ஏதுமில்லை.இவ்வாதுரை, சாட்சியச் சட்டத்தின் பிரிவு 32-இன் வெளிப்படையான வகைமுறையைப் புறக்கணிக்கிறது.உட்பிரிவு (1) - இன் இரண்டாவது பத்தி பின்வருமாறு எடுத்துரைக்கப் படுவதாவது:
>
> > " அத்தகைய வாக்குமூலம் அளிக்கும்போது அவற்றை கூறியவர் மரணத்தை எதிர்பார்த்திருந்தாலும் அல்லது எதிர்பார்க்காதிருந்தாலும் மற்றும் அவரது மரணத்திற்கான காரணம் எந்த நடவடிக்கையில் பிரச்சனைக்கு வந்திருக்கிறதோ அந்த நடவடிக்கையின் தன்மை எத்தகையதாயிருந்தாலும் அவை தொடர் புடையவையாகும். "
>
> ஒரு நபர் தனது மரணம் விரைவிலேயே நிகழக்கூடுமென்று எதிர்பார்த்திருக்கும்போது, அவர் பொய்யுரைக்கமாட்டார் என்பது சந்தேகத்திற்கிடமின்றி சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.ஆனால் அந்த நபர் எதிர்பார்த்ததைவிட நீண்ட காலத்திற்கு உயிர் வாழ்ந்து வருவாரானால், அத்தகைய வாக்குமூலமானது அதன் மதிப்பை இழந்துவிட்டதாகப் பொருளாகாது.ஒவ்வொரு வழக்கிலும், அதில் நிறுவப்பட்ட பொருண்மைகள் மற்றும் சூழ்நிலைகளின் அடிப்படையில் அதன் பிரச்சனையானது பரிசீலிக்கப்படவேண்டும். வாக்குமூலம் உண்மையாக இருக்கமுடியாது என்று காட்டுவதற்கு பதிவாவணத்தில் ஏதுமில்லையென்றாலோ அல்லது பதிவாவணத்திலுள்ள மற்ற சான்றாதாரங்கள், வாக்குமூலங்களின் உள்ளடங்களை உறுதியூட்டக்கூடியதென்றாலோ, நீதிமன்றம் அதைக் கட்டாயமாக

ஏற்றுக்கொண்டு, அதன்படி செயல்படலாம்.தற்போதைய வழக்கில், இரு நீதிமன்றங்களும், ஆவணச் சான்று முழுமையையும் விவாதித்து சா.ஆ. 5 மற்றும் 6-இல் உள்ள இரு மரண வாக்குமூலங்களும் ஏற்கத்தக்கன என்று கண்டறிந்தது. "

13. இந்நீதிமன்றத்தின் அரசியலமைப்பு நீதியராயத் தீர்ப்புரையான (மேற்படி) லஷ்மண் -எதிர்-மகாராஷ்டிர மாநில அரசு (ஏ.ஐ.ஆர்.2002 எஸ்.சி. 2973) என்ற வழக்கின் மீது மேல்முறையீட்டாளருக்கான கற்றறிந்த வழக்குரைஞரால் அதிக வலியுறுத்தல் கொடுக்கப்பட்டுள்ளது.மேற்படி அரசியலமைப்பு நீதியராயம், இந்நீதிமன்றத்தின் இரு மற்றும் மூவரமர் நீதியராயத் தீர்ப்புரைகள் அதாவது **பாப்பரம்பகா ரோசம்மா மற்றும் பலர் எதிர்-ஆந்திரப் பிரதேச மாநில அரசு (1999) 7 எஸ்.சி.சி. 695:(ஏ.ஐ.ஆர் .1999 எஸ்.சி. 3455) மற்றும் கோலி சன்னிலால் சாவ்ஜி மற்றும் ஒருவர் -எதிர்-குஜராத் மாநில அரசு (1999) 9 எஸ். சி.சி. 562:(ஏ.ஐ.ஆர் .1999 எஸ்.சி. 3695)** என்ற வழக்குகளுக் கிடையேயான முரண்பாட்டைக் களைவதற்காக அமைக்கப் பட்டது.மேற்படி இரு வழக்குகளிலும் வெளிப்படுத்தப்பட்ட வழக்கின் பொருண்மைகளும், முரண்பாடான கருத்துகளும் பத்தி எண்கள் 1 மற்றும் 2-இல் குறிப்பிடப்பட்டுள்ளன.அவை பின்வருமாறு:

" இந்தக் குற்றவியல் மேல்முறையீட்டில் குற்றம் சாட்டப்பட்டவர்-மேல்முறையீட்டாளரின் தண்டனைத் தீர்ப்பு, நீதித்துறை நடுவர் (அ.சா.4) அவர்களால் பதிவு செய்யப்பட்ட இறந்தவரின் மரண வாக்குமூலத்தின் அடிப்படையிலானதாகும். இறந்தவரால் அளிக்கப்படும் மரண வாக்குமூலமானது உண்மையானதாகவும், தன்னிச்சை யானதாகவும் மற்றும் நம்பிக்கைக்குரியதாகவும் இருக்கவேண்டும் என்று கற்றறிந்த அமர்வு நீதிபதி அவர்களாலும், உயர் நீதிமன்றத்தாலும் தீர்மானிக்கப்பட்டது. குற்றவியல் நடுவர், தனது சாட்சியத்தில், தான் பணியிலுள்ள மருத்துவர் மூலம் நோயாளியை சந்தித்ததாகவும், அவரால்

வாக்குமூலம் அளிக்க இயலுமா? என்பதைக் கண்டறிவதற்கு, அவர் மீது தீ வைக்கப்பட்டதா? அவர் உணர்வுடன் வாக்குமூலம் அளிக்க இயலுமா?என்று நோயாளியிடம் சில கேள்விகளைக் கேட்டபிறகு, திருப்தியடைந்ததன்பேரில், அவர் இறந்தவரின் வாக்கு மூலத்தைப் பதிவு செய்ததாகக் கூறியிருந்தார். நோயாளி, உணர்வுடன் இருந்தார் என்பதைச் சுட்டிக்காட்டுவதற்கு மருத்துவரின் சான்றிதழ் இருந்தது. உயர் நீதிமன்றமானது, நடுவரின் சாட்சியத்தையும், நடுவரால் பதிவு செய்யப்பட்ட மரண வாக்குமூலத்தின் அடிப்படையிலான மருத்துவரின் சான்றிதழையும், பதிவாவணத்திலுள்ள மற்ற சூழ்நிலைகளையும் ஒன்றிணைத்து பரிசீலித்ததன்பேரில், இறந்தவரான சந்திரகலா உடற்ரீதியாகவும், மனரீதியாகவும் தகுதியுடையவராகயிருந்ததாகவும், அவ்வகையில் மரண வாக்குமூலம் சார்வுறப்படலாம் என்ற முடிவுக்கு வந்தது. மும்பை உயர் நீதிமன்றத்தின் ஔரங்காபாத் நீதியராயத் தீர்ப்புரைக்கு எதிரான மேல்முறையீடு இந்நீதிமன்றத்தின் மூவரமர் நீதியராயத்தின் முன்பு வைக்கப்பட்டபோது, மேல்முறையீட்டாளருக்கான வழக்குரைஞர் பாப்பரம்பகா ரோசம்மா-எதிர்-ஆந்திரப் பிரதேச மாநில அரசு, (1999) 7 எஸ்.சி.சி. 695:(ஏ.ஐ.ஆர் .1999 எஸ்.சி. 3455) என்ற வழக்கின் தீர்முடிவின் மீது சார்வுற்று, நோயாளி வாக்குமூலம் அளிக்குமளவுக்கு தகுதியுடைய மனநிலையில் இருந்தார் என்று சொல்லுமளவுக்கு மருத்துவரின் சான்றிதழ் இல்லை என்பதால், தண்டனைத் தீர்ப்புக்கான ஒரே அடிப்படையாக அமைப்பதற்கு நீதிமன்றத்தால் மரண வாக்குமூலம் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கக்கூடாது என்று வாதுரைத்தார். மாநில அரசுக்காக முன்னிலையான வழக்குரைஞரின் சார்பாக கோலி சன்னிலால் சாவ்ஜி -எதிர்-குஜராத் மாநில அரசு (1999) 9 எஸ்.சி.சி. 562:(ஏ.ஐ.ஆர்.1999 எஸ்.சி. 3695) என்ற வழக்கில் இந்நீதிமன்றத்தின் மற்றொரு மூவரமர் நீதியராயத் தீர்முடிவு சார்வுறப்பட்டு, அதில்,

இறந்தவர் முழு உணர்வுநிலையுடன் வாக்கு மூலம் அளிக்கக்கூடிய திறனுடையவராயிருந்தாரென ஆவணச் சான்று சுட்டிக்காட்டினால், இவ்வாறாக பதிவு செய்யப்பட்ட இறந்தவரின் மரண வாக்குமூலத்தை, இறந்தவர், பிரச்சனைக்குரிய வாக்குமூலத்தை அளிக்க தகுதியுடைய மனநிலையிலிருந்தார் என்று மருத்துவர் மேற்குறிப்பு செய்யவில்லை என்பதாலேயே, அது புறக்கணிக்கப்பட முடியாது என்று இந்நீதிமன்றம் தீர்மானித்துள்ளது. மூவரமர் நீதியராயக் கற்றறிந்த நீதியரசர்களால் அளிக்கப்பட்ட மேற்படி இரு தீர்முடிவுகளும் ஏதோவொருவகையில் முரண்பாடாக இருந்ததால், நீதியராயம், 27.07.2002-ஆம் தேதியிடப்பட்ட உத்தரவின் மூலம் இப்பிரச்சனையை அரசியலமைப்பு நீதியராயத்திற்கு பரிந்துரை செய்தது.

2.இந்நீதிமன்றத்தின் மேற்படி மூவரமர் நீதியராய தீர் முடிவுக்கிடையேயான முரண்பாடு என அழைக்கப்படுவதை மட்டுமே நாங்கள் களைய முற்படுகின்றோம் என்பதை தொடக்கத்திலேயே தெளிவுப்படுத்துகிறோம். அதன்பின்னர், நீதியரசர் திரு. எம்.பி.ஷா அவர்களின் தலைமையிலான நீதியராயத்தின் முன்பு குற்றவியல் மேல்முறையீடு முன்வைக்கப்பட்டதும், அவர் அவ்வழக்கை அரசியலமைப்பு நீதியராயத்திற்கு பரிந்துரைத்தார். ஆகவே, நாங்கள் ஆவணச் சான்றினை ஆராய்ந்து, ஏதோவொரு வகையில் முடிவு செய்வதை நிறுத்திவிட்டு, மேற்குறிப்பிடப் பட்ட இரு தீர்முடிவுகளின் ஏற்புடைமைக்கேற்ப எங்களது பரிசீலனைகளை நாங்கள் வரையறுத்துக்கொள்கிறோம். "

14. (மேற்படி) கோலி சன்னிலால் சாவ்ஜி (ஏ.ஐ.ஆர்.1999 எஸ்.சி. 3455) -இல் அரசியலமைப்பு நீதியராயம், பிந்தைய தீர்ப்புரையின் மூலம் எடுக்கப்பட்ட கருத்துரையை அங்கீகரித்தது.5-ஆவது பத்தியில் பின்வருமாறு வகுத்துரைத்துள்ளதாவது:-

"5. நீதிமன்றம் மேற்படி வழக்கிலும், உறர்ஜித் கவுர்-எதிர்-பஞ்சாப் மாநில அரசு (ஏ.ஐ.ஆர்.1999 எஸ்.சி .2571) -இல் இந்நீதிமன்றத்தின் தீர்முடிவின்மீது சார்வுற்றது, அதில் நடுவர், தனது சாட்சியத்தில், அவர் சாட்சியம் அளிப்பதற்கு தகுதியுடைய மனநிலையில் இருந்தாரா? என்பதை மருத்துவரிடமிருந்து உறுதிசெய்து, அதற்கான மேற்குறிப்பைப் பெற்றுக்கொண்டதாகத் தெரிவித்திருந்தார், வாக்குமூலத்தில் மேற்குறிப்பு செய்யப்படாமல் விண்ணப்பத்தில் செய்யப்பட்டது என்பதற்காகவே மரண வாக்குமூலத்தை எவ்வகையிலும் சந்தேகம் கொள்ளலாகாது என்பதாகும். ஏற்கெனவே சுட்டிக்காட்டப்பட்ட காரணங்களிலிருந்து, பாப்பராம்பகா ரோசம்மா -எதிர்-ஆந்திரப் பிரதேச மாநில அரசு (1999) 7 எஸ்.சி.சி. 695 (எஸ்.சி.சி. பக்கம் 701, பத்தி 8-இல்):(ஏ.ஐ.ஆர் .1999 எஸ்.சி. 3455 பக்கம் 3459-இல், ஏ.ஐ.ஆர். பத்தி 8-இல்)

> ' காயமடைந்தவர், வாக்குமூலம் அளித்த சமயத்தில், நல்ல மனநிலையில் இருந்தார் என்பதற்கு மருத்துவ சான்றிதழ் இல்லாதநிலையில், வாக்குமூலம் அளித்த சமயத்தில், காயமடைந்தவர் நல்ல மனநிலையில் இருந்தார் என்று கருத்து தெரிவித்த நடுவரின் அகநிலையான மனநிறைவை ஏற்றுக்கொள்வதென்பது மிகவும் கேடார்ந்தது என்பதான கருத்தறிவிப்புகள் மிகவும் விரிவாக சொல்லப்பட்டிருந்தாலும் "

அதில் சரியான சட்டத்தெளிவு இல்லை என்ற முடிவுக்கு வருவதில் நாங்கள் தயக்கங்கொள்ளவில்லை. நோயாளி உணர்வுடன் இருக்கிறார் என்பதாக மருத்துவரின் சான்றிதழும், நோயாளி நல்ல மனநிலையில் இருந்தார் என்பதை குறிப்பாக, நடுவர் தனது சாட்சியத்தில், தான் நோயாளியிடம் கேட்ட கேள்விகளையும், அதற்கு கொடுக்கப்பட்ட விடைகளையும் குறிப்பிட்டு, நோயாளி நல்ல மனநிலையில்

இருந்தாரென திருப்தியடைந்த பின்னர், தான் மரண வாக்குமூலத்தைப் பதிவு செய்ததாக உறுதியாகக் கூறியிருந்தார் என்பதற்கு சான்றேதுமில்லை என்பதும் உண்மையிலேயே மிக நுட்பமான கருத்தாகும்.ஆகவே, பாப்பரம்பகா ரோசம்மா -எதிர்-ஆந்திரப் பிரதேச மாநில அரசு, (1999) 7 எஸ்.சி.சி .695:(ஏ.ஐ.ஆர்.1999 எஸ்.சி. 3455) -இல் இந்நீதிமன்றத்தின் தீர்ப்புரை சரியாக தீர்மானிக்கப்படவில்லை என்று முடிவெடுக்கப்பட வேண்டும்.மற்றும் கோலி சன்னிலால் சாவ்ஜி - எதிர்-குஜராத் மாநில அரசு, (1999) 9 எஸ்.சி.சி. 562:(ஏ.ஐ.ஆர்.1999 எஸ்.சி. 3695) -இல் இந்நீதிமன்றத்தால் வகுத்துரைக்கப்பட்ட சட்டத்தை நாங்கள் உறுதிசெய்கிறோம் "

15. வாக்குமூலம் அளிக்கப்படும் சமயத்தில் காயமுற்றவர் நல்ல மனநிலையில் இருந்தார் என்பதற்கு மருத்துவ சான்றிதழ் இல்லாதநிலையில், காயமுற்றவர், மரண வாக்குமூலம் அளித்த சமயத்தில் நல்ல மனநிலையில் இருந்தார் என்று கருத்துரைத்த நடுவரின் அகநிலையான மனநிறைவினை ஏற்றுக்கொள்வது என்பது மிகவும் கேடார்ந்ததாகும் மற்றும் அது, சரியான சட்டத்தை வகுத்தமைத்ததாகாது என்பது (மேற்கண்ட) பாப்பரம்பகா ரோசம்மா (ஏ.ஐ.ஆர் 1999 எஸ்.சி. 3455) –இல் மூவரமர் நீதியராயத்தால் வெளியிடப்பட்ட கருத்துரையாகும். ஆகவே, மரண வாக்குமூலம் அளிக்கும் பாதிக்கப்பட்டவரின் உடற்தகுதி தொடர்பான மருத்துவ சான்றிதழின் தன்மை குறித்த பிரச்சனையை மட்டுமே அரசியலமைப்பு நீதியராயமானது பரிசீலித்தது. மேற்படி வழக்கில் வகுத்துரைக்கப்பட்டுள்ள அறுதியுரை, தற்போதைய வழக்கில் மேல்முறையீட்டாளருக்கான வழக்குரைஞரால் எழுப்பப்பட்ட வாதுரைக்கு எவ்வகையிலும் ஆதரவளிக்காது. பிரிவு 161-இன் கீழ் 05.12.1990 அன்று விசாரணை அதிகாரியால் பதிவு செய்யப்பட்ட பாதிக்கப்பட்டவரின் வாக்குமூலம் குறித்தே தற்போதைய வழக்காகும். விசாரணை நீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றம் இரண்டுமே அவ்வாக்குமூலம் பொருத்தமுடையது என்று தீர்மானித்து, அவ்வாக்குமூலத்தின்மேல் சார்வுற்றது.

16. கு.வி.மு.ச. பிரிவு 161-இன் கீழானதும், பிரிவு 32 (1) -இன் கீழ் உள்ளடக்கப்பட்டதுமான வாக்குமூலம் தொடர்புடையதும், ஏற்கத்தக்கதுமாகும் என்று இந்நீதிமன்றம் வகுத்துரைத்துள்ளது என்று நாங்கள் கருதுகிறோம். ஆகவே, 05.12.1990 அன்று விசாரணை அதிகாரியால் பதிவு செய்யப்பட்ட காயமுற்றவரின் வாக்குமூலத்தின்மேல் சார்வுற்ற விசாரணை நீதிமன்றத்தின் மற்றும் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புரையில் நாங்கள் பிழை ஏதும் காணவில்லை. விசாரணை அதிகாரி, தனது குறுக்கு விசாரணையில், தான் 30.11.1990 அன்று இரவு, வாக்குமூலத்தைப் பதிவு செய்வதற்காக மருத்துவ கல்லூரிக்கு சென்றதாகவும், ஆனால் அவரது நிலை மோசமாக இருந்ததால், தான், அவரை விசாரிக்க வில்லை என்பதாகவும் தெரிவித்துள்ளார் என்பதைக் குறிப்பிடுவதும் உகந்ததாகும். எனவே விசாரணை அதிகாரியிடம் 05.12.1990 அன்று அளிக்கப்பட்ட வாக்கு மூலத்தின்மீது நம்பிக்கை வைப்பது என்பது அத்தகைய வாக்குமூலத்தின் மதிப்பைக் குறைக்கும் பொருட்டான சந்தேகத்திற்குரிய சூழ்நிலைகள் எதற்கும் வழிவகுக்காது. பாதிக்கப்பட்டவரால் 05.12.1990 அன்று அளிக்கப்பட்ட வாக்குமூலமானது பின்வருமாறு:

> " என் பெயர் பாஸ்கர் சாஉறீ, த/பெ.காய்பால்யா சாஉறீ, தற்போதைய/நிரந்தரமாக வசித்துவரும் கிராமம் லகால் தே, பி.எஸ். திகாபஉறன்டி மாவட்டம், கங்க்நாம்.05.12.1990-ஆம் தேதியான இன்று மருத்துவ கல்லூரி நோயாளிகளின் பிரிவிலிருந்துகொண்டு, நான் இவ்வாறு எனது வாக்குமூலத்தை அளிக்கிறேன். நான் எனது மிதிவண்டியில் 28.11.1990 அன்று சுமார் 6.30-இலிருந்து 7.00 மணியளவில் எங்களது லங்கால் தே கிராமத்திலிருந்து பேலபாடாவுக்கு சென்று கொண்டிருந்தேன் நான் போகும் வழியில் பேலபாடா கிராம பாலத்திற்கருகில், எங்களது கிராமவாசிகளான மாதப் பிசாயின் மகனான பிரதீப் பிசாயும், அவரது சில நண்பர்களும் என்னை கொலை செய்வதற்கு காத்துக்கொண்டிருந்தனர். அவர்கள் ஒரு ஸ்கூட்டரில் வந்திருந்தனர். எனக்கு மற்றவர்களை தெரியாது. பேல்பாடா பாலம்

அருகில், திடீரென்று பிரதீப் பிசாய் என்னை நோக்கி வெடிகுண்டு வீசியதில், அது எனது வலது காலில்வந்து தட்டியபிறகு, வெடித்துச் சிதறியதால் நான் சாலையில் விழுந்துவிட்டேன்.நான் எனது உயிரைக் காப்பாற்றிக்கொள்ள முயன்று, ஓட ஆரம்பித்த சமயத்தில், பிரதீப் பிசாய் என் பின்னால் ஓடிவந்து, எனது வலது தோளின்மேல் இடுப்புவார்ப் பட்டையால் தாக்கியதில் நான் இரத்த வெள்ளத்தில் கீழே விழுந்துவிட்டேன். அதன்பிறகு, அவர் எடுத்துவந்த குப்பியிலிருந்து, எனது தலை, முகம், மார்பு மற்றும் எனது உடல் முழுவதிலும் அமிலத்தை ஊற்றினார். எனது உயிரைக் காத்துக்கொள்ள, எனது உடலிலிருந்து எனது கருமை நிற அங்கியை தூக்கி எறிந்துவிட்டேன். எனது மோசமான நிலையைக் கண்டு, பிரதீப் பிசாயும், அவரது நண்பர்களும் அந்த இடத்தைவிட்டுச் சென்றனர். அதன்பின்னர், எங்கள் கிராமத்தைச் சேர்ந்த காலியா பாடியின் மகன் என்னைப் பார்த்து, மிதிவண்டியின் உதவியுடன் என்னை எடுத்துக்கொண்டு சென்றுகொண்டிருந்தபோது, எனது சகோதரரான சுரேந்தர் சாஉறீ-க்கு தகவல் கிடைத்து, எங்களது கிராமத்தைச் சேர்ந்த தாரினி சாஉறீ, கிஷ்நாத் பிசாய் மற்றும் பித்தியாதர பாபு என்னிடம் வந்தனர் மற்றும் எனது சகோதரர் உடனடியாக என்னை பெர்காம்பூர் மருத்துவக் கல்லூரியில் சேர்த்தார். இல்லையென்றால், நான் அந்த இடத்திலேயே இறந்திருப்பேன். எங்களது முன்விரோதத்தின் காரணமாக பிரதீப் பிசாய் என்னை கொல்வதற்கு முயற்சி செய்து வந்தார். ஆனால், நான் நொடிப்பொழுதில் காப்பாற்றப்பட்டேன். நான் உயிர் பிழைப்பதற்கான வாய்ப்பில்லை. "

17. விசாரணை நீதிமன்றம், சான்றினை மதிப்பீடு செய்தபிறகு, இறந்தவர் அமில வீச்சினாலடைந்த காயங்களும், குண்டுவெடிப்பு காயங்களும் அடைந்தார் என்ற காண்முடிவுகளைப் பதிவு செய்தது.அமிலத் தாக்குதலில், அவரது கண்பார்வையை இழந்ததுடன், வலது கால் பாதத்தையும் இழந்துவிட்டார். 05.12.1990 அன்று இறந்தவர் அளித்த வாக்குமூலமானது,

பிரிவு 32-இன் கீழ் ஏற்கத் தக்கதாகும் என்று விசாரணை நீதிமன்றம் சரியாக தீர்மானித்தது, ஏனென்றால் அது, அவரது இறப்பிற்கான காரணத்தையும், அவர் எப்படி காயமடைந்தார் என்பதையும் குறித்ததாகும்.தீர்ப்புரையின் பத்தி 8-இல் விசாரணை நீதிமன்றம் பின்வருமாறு பதிவு செய்துள்ளதாவது:

> **"8.** இறந்தவர் அமிலத் தாக்குதலினால் காயமும், குண்டுவெடிப்பு காயமும் அடைந்து, அவர் சிகிச்சையின் போது மருத்துவமனையிலேயே மரணமடைந்தார் என்பது மருத்துவ அறிக்கையிலிருந்து தெளிவாகிறது. இறந்த நபரின்மேல் யார் அமிலம் மற்றும் வெடிகுண்டு காயங்களை ஏற்படுத்தினர் என்பதே தற்போது பார்க்க வேண்டியதாகும். இச்சம்பவத்திற்கு கண்ணுற்ற சாட்சி எவருமிலர். இறந்தவர், அ.சா .1-யிடமும், விசாரணை அதிகாரியிடமும் தகவல் அளித்திருந்தார். குற்றஞ்சாட்டப்பட்டவர், இறந்தவரை தாக்கி அவரது முகத்திலும், உடலின் பிற உறுப்புகளிலும் அமிலத்தை வீசினார் என்று இறந்தவரிடமிருந்து அ.சா .1 அறிந்துகொண்டதாகவும், அவர் இறந்தவரிடமிருந்து, சா.ஆ .12-இன் மூலம் பொருண்மையை அறிந்தபிறகு, காவல் துறையிடம் இவ்விடயத்தை குறித்து அவர் தெரிவித்ததாகவும் கூறினார். அ.சா .3, காயங்களடைந்த இறந்தவரை மருத்துவமனைக்கு கொண்டுசென்றார் என்பது அ.சா .3-இன் சான்றிலிருந்து தெளிவாகிறது. அ.சா .1-இடம் இறந்தவர் அளித்த வாக்குமூலம், சாட்சியச் சட்டத்தின் பிரிவு 32-இன் கீழ் ஏற்கத்தக்கதாகும். ஏனென்றால், அது, அவரது மரணத்திற்கான காரணத்தையும், அவர் எவ்வாறு காயமுற்றார் என்பதையும் குறித்ததாகும். "

18. இறந்தவரின் உடலில் உள்ள காயங்கள், அரசுத்தரப்பு வழக்கிற்கு முழுமையான ஆதரவளிக்கிறது.ஆதலால், 05.12.1990 அன்று இறந்தவரால் அளிக்கப்பட்ட வாக்குமூலமானது, இறந்தவரின் உடலிலுள்ள காயங்களிலிருந்தும், அரசுத்தரப்பால் கோரப்பட்டவாறு, நிகழ்வுகளின் கோர்வையும்

மற்றும் சம்பவங்கள் நடந்த முறைகளிலிருந்தும் உறுதியூட்டப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. தகவல் அளித்தவரான அ.சா .1, அரசுத்தரப்பு வழக்கை முழுமையாக ஆதரித்துள்ளார்.

19. உயர் நீதிமன்றம், மேல்முறையீட்டைத் தள்ளுபடி செய்கையில், குற்றஞ்சாட்டப்பட்டவரின் குற்றம் மற்றும் தண்டனை தீர்ப்பு குறைந்தபட்ச குற்றத்திற்கானதாகவும், சலுகை காட்டுவதாகவும் இருந்தது என்றும் கருத்துரைத்தது.

20. நாங்கள் ஆவணச் சான்றினை ஆராய்ந்து, மேல்முறையீட்டாளருக்கு தண்டனைத் தீர்ப்பளித்ததில் விசாரணை நீதிமன்றம் பிழை ஏதும் புரியவில்லை என்று முழு திருப்தியடைகிறோம். உயர் நீதிமன்றமும் மேல்முறையீட்டைத் தீர்மானிக்கையில், ஆவணச் சான்றினை ஆய்வு செய்து, மேல்முறையீட்டை சரியாகத் தள்ளுபடி செய்துள்ளது. ஆதலால், நாங்கள் இந்த மேல்முறையீட்டில் எந்த தகுதிப்பாடும் காணவில்லை என்பதால், அது தள்ளுபடி செய்யப்படுகிறது.

மாண்புமிகு நீதியரசர் திரு. ஏ.கே. சிக்ரி

மாண்புமிகு நீதியரசர் திரு. அசோக் பூஷன்

புதுதில்லி,

10.10.2018

<u>உரிமைத்துறப்பு</u>

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்குட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப்பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."